செய்தி வெளியீடு எண்: 1033 நாள்: 12.11.2026

செய்தி வெளியீடு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் தவணைக் கொள்முதல் திட்டங்களில் மனை, வீடு மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு பெற்று 31.03.2026-க்குள் தவணைக் காலம் முடிவுற்ற திட்டங்களில், நிலுவைத்தொகை செலுத்தத் தவறிய ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில் வட்டித் தள்ளுபடி செய்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் ஆணை.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் தவணைமுறைத் திட்டத்தின் கீழ் மனை, வீடு மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு பெற்று தவணைக் காலம் முடிவுற்ற பின்பும் விற்பனைப் பத்திரம் பெறாமல் சுமார் 6,496 ஒதுக்கீடுதாரர்கள் உள்ளனர். இவர்கள் முழுத்தொகையையும் செலுத்தாமல் விற்பனைப் பத்திரம் பெறமுடியாமல் உள்ள நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச. ஜோசப் விஜய் அவர்களின் அறிவுரையின்படி, ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான வட்டிச் சுமையைக் கருத்திற்கொண்டு விற்பனைப் பத்திரம் விரைவாக வழங்குவதற்கு ஏதுவாக வட்டித் தள்ளுபடி செய்வதாக 2026-2027ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் தவணைக் கொள்முதல் திட்டங்களில் மனை, வீடு மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு பெற்று 31.03.2026-க்குள் தவணைக் காலம் முடிவுற்ற திட்டங்களில், நிலுவைத்தொகை செலுத்தத் தவறிய ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில், அத்தொகையினை ஒரே தவணையாகச் செலுத்துபவர்களுக்கு விதிக்கப்படும் அபராத வட்டித் தள்ளுபடியும், வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டித் தள்ளுபடியும் மற்றும் நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தில் வசூலிக்கப்படும் தொகைக்கான வட்டியில் ஒவ்வொரு ஆண்டிற்கும்

Verified RedEstate™

5 மாதத்திற்குண்டான வட்டித் தள்ளுபடியும் செய்து விற்பனைப் பத்திரம் வழங்கப்படும். இந்தத் திட்டம் ஓராண்டு காலத்திற்கு சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம், சுமார் 6,496 ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால், வாரியத்திற்கு சுமார் 92.39 கோடி ரூபாய் வருவாய் ஏற்படுவதுடன், இச்சிறப்பு வட்டி சலுகையின் மூலம் ஒதுக்கீட்டாளர்களுக்கு 18.45 கோடி ரூபாய் தள்ளுபடியும் வழங்கப்படும்.

.....

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu

Verified RealEstate™